தி.மு.க முப்பெரும் விழா 2026

# கழக முப்பெரும் விழாவில் விருது பெற்றவர்கள்!



**திரு. கு. செல்லப்பா (பெரியார் விருது)**

தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூரில் திரு. குத்தாலிங்கம் - திருமதி. சீனியம்மாள் ஆகியோரின் மகனாக 16.11.1952 அன்று பிறந்தவர் கு. செல்லப்பா அவர்கள்.

1968ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சொற்பொழிவுகளை கேட்டு தன்னை மாணவர் தி.மு.க.வில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கிய கு. செல்லப்பா, 1977ஆம் ஆண்டு ஆவுடையானூர் கிளைக் கழகச் செயலாளராகவும், கீழ்ப்பாவூர் ஒன்றியத்திலிருந்து மாவட்டப் பிரதிநிதியாகவும், கீழப்பாவூர் ஒன்றியச் செயலாளராக ஐந்து முறை பணியாற்றி பின்னர் 2015 முதல் மாநில தி.மு.க. விவசாய அணியின் துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஒன்பது முறை சிறைவாசம் ஏகியவர் கு. செல்லப்பா. இலங்கைத் தமிழர் நலனுக்காக 1985ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு 15 நாட்கள் சிறைவாசம், இந்திக்கு எதிரான மறியலில் பாவூர் சத்திரம் காவல் நிலையத்தில் கலந்து கொண்டு கைதாகி பாளை மத்திய சிறையில் 81 நாட்கள் அடைப்பட்டிருந்தார். தொடர்ச்சியாக சமச்சீர் கல்விக்கான போராட்டத்தில் கலந்து கொண்டு பாளை மத்திய சிறையில் 10 நாட்கள் அடைப்பட்டிருந்தார்.

திருச்செந்தூர் கோவில் வைர வேல் திருட்டைக் கண்டித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நடைபயணம் மேற்கொண்டபோது, விருதுநகரிலிருந்து கலைஞர் அவர்களுடன் இணைந்து திருச்செந்தூர் வரை நடைபயணம் மேற்கொண்டார்.

கழகம் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் சிறப்பாகப் பணியாற்றியவர் கு. செல்லப்பா அவர்கள்.

அண்ணா அறிவாலயம் கட்டுவதற்கு நெல்லை மாவட்டத்தில் அதிக நிதி திரட்டித் தந்ததனால் முத்தமிழறிஞர் கலைஞர் கையினால் கணையாழி பெற்றதை பெருமையுடன் நினைவு கூர்கிறார் கு. செல்லப்பா.

இவருடைய துணைவியார் பெயர் இந்திரா. இவருக்கு 3 மகள்கள். மூவருக்கும் திருமணமாகிவிட்டது.

ஆவுடையானூர் ஊராட்சி மன்றத் தலைவராக 1996ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய துணைவியார் 2011ஆம் ஆண்டு ஆவுடையானூர் ஊராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் நேற்று (19.9.2026), சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெற்ற முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை**
19.09.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



**திரு. ஜி.கே. சுபாஷ் (அண்ணா விருது)**

சேலம் மாவட்டத்தில் திரு. கிருஷ்ணசாமி, திருமதி மாரியாயி இணையரின் மகனாக 16.10.1937 அன்று பிறந்தவர் திரு. ஜி.கே. சுபாஷ் அவர்கள். அவருடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள், ஐந்து சகோதரிகள்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற கழக முன்னோடிகளின் உரைகளைக் கேட்டு கழகக் கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு 1953ஆம் ஆண்டில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கினார் ஜி.கே. சுபாஷ்.

1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சேலம் நகர கைத்தறிப் போராட்டத்திற்குத் தலைமைத் தாங்கி கடையடைப்பு, இலங்கைத் தமிழர்களுக்கான போராட்டம், பால் கமிஷன் அறிக்கையொட்டி தலைவர் கலைஞர் கைதைக் கண்டித்துப் போராட்டம், ராஜீவ்காந்தி கொடும்பாவி எரித்துக் கைது என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு கைதாகி சிறைவாசம் ஏகியவர் ஜி.கே. சுபாஷ்.

சேலம் நகரச் செயலாளராக, பின்னர் மாநகரச் செயலாளராக, மாநகர அவைத் தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராக, பல்வேறு பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியுள்ள திரு.ஜி.கே. சுபாஷ், தற்போது மாவட்டக் கழக அவைத் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

1990ஆம் ஆண்டு சேலம் மாநகரக் கூட்டுறவு வங்கியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1996ஆம் ஆண்டில் மாநகராட்சியின் துணை மேயராகப் பொறுப்பேற்று ஐந்தாண்டுகள் பதவி வகித்தார்.

கழகத் துணை அமைப்புகளான தென்னவர் முத்தமிழ் மன்றச் செயலாளர், கேவிகே சாமி நினைவு படிப்பகச் செயலாளர் போன்ற பொறுப்புகளிலும் செயல்பட்டு வந்துள்ளார்.

1983ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கலந்து கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் “சுபாஷ் இனி சபாஷ்” என்று பாராட்டினார்.

ஜி.கே. சுபாஷ் அவர்களின் துணைவியார் அமிர்தம் அம்மையார். இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் நேற்று (19.9.2026), சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெற்ற முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “அண்ணா விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை**
19.09.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



**திரு. திருச்சி சிவா, எம்.பி. (கலைஞர் விருது)**

திருச்சியில் திரு. ஆர். நடேசன், திருமதி. தனபாக்கியம் இணையருக்கு 6.6.1955ஆம் ஆண்டு பிறந்தவர் திருச்சி சிவா. குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்த இவரை வளர்த்து, ஆளாக்கி படிக்க வைத்தவர் இவருடைய தாயார்.

சுயமரியாதை உணர்வையும், திராவிட இயக்கப் பற்றையும் ஊட்டி வளர்த்த இவரது தாயார், சர். ஏ.டி. பன்னீர்செல்வம் தொடங்கி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் குறித்தும் அவர்களது சிந்தனைகள் குறித்தும் சிறுவயது முதலே திருச்சி சிவாவுக்குச் சொல்லிக் கொடுத்து வளர்த்தார்.

தன்னுடைய 15ஆவது வயதில் திருச்சி டவுன் ஹாலில் தந்தை பெரியாரின் உரையைக் கேட்டு திராவிட இயக்கத்தின்பால் தனக்கு பெரும் ஈர்ப்பு ஏற்பட்டதாக திருச்சி சிவா கூறுகிறார்.

திருச்சியில் அவர் படித்த காலத்தில் பள்ளியிலும், கல்லூரியிலும் உடன் படித்த திராவிட இயக்க உணர்வுள்ள மாணவர்கள் அவரோடு நெருக்கமானார்கள். விடுதியில் மாணவர்கள் கூடி நடத்தும் கூட்டங்களில் பங்கேற்று உரை நிகழ்த்தியதோடு, மாணவர் தி.மு.க. நடத்திய கூட்டங்களிலும் உரை நிகழ்த்தத் தொடங்கினார்.

எம்.ஏ. ஆங்கில இலக்கியம் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது அவசர நிலை காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஓராண்டு காலம் அடைபட்டிருந்தார். இறுதித் தேர்வு எழுத வந்தபோது துப்பாக்கி ஏந்திய ஆறு போலீசார் பாதுகாப்போடு பரோலில் தேர்வு எழுத வந்ததை மறக்க முடியாத நினைவாகக் கருதுகிறார்.

ஐ.ஏ.எஸ். கனவோடு இருந்த திருச்சி சிவா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்த பின் அவரால் ஈர்க்கப்பட்டு முழு நேரக் கழகப் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

1978 திருச்சி மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராகத் தொடங்கி இளைஞர் அணி அமைப்புக்குழு உறுப்பினராக, இன்றைய கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலினோடு இளைஞர் அணி துணைச் செயலாளராக, மாணவர் அணிச் செயலாளராக , கொள்கை பரப்பு செயலாளராக , இப்போது கழக துணைப் பொதுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளில் இருந்து முழு நேர இயக்கப் பணியாற்றி வருகிறார்.

திருச்சியில்1982இளைஞர்அணிஇரண்டாம்ஆண்டுநிறைவுமாநாட்டின்செயலாளராகமறைந்தஅன்பில்பொய்யாமொழியோடு இணைந்து நடத்துகின்ற வாய்ப்பு முக்கியமான ஒரு நிகழ்வு என குறிப்பிடும் இவர் 1996ல் புதுக்கோட்டை தொகுதி நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக ஒரு முறையும், இப்போது மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவராவும் பணியாற்றி வருகிறார். மனைவி தேவிகாராணி மறைந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளார்கள்.

மிசா சிவா என்ற தன் பெயரை கலைஞர் தன் கையால் திருச்சி சிவா என்று எழுதி இளைஞர் அணி அமைப்புக் குழு உறுப்பினராக அறிவித்த நாள் தொட்டு அரசிதழில் அச்சேறி ஐ.நா. மன்றம் வரை அந்த பெயரே நிலைத்து விட்டதாக கூறும் இவர் தன்னை அரவணைத்து, உச்சி முகர்ந்து பாராட்டி, ஊக்கமும் உரமும், உயர்வும் தந்து தனக்கு “எல்லாம் ஆன” தலைவர் கலைஞர் பெயரால் விருது வழங்கப்படுவதை வாழ்வின் பெரும்பேறாக கருதுவதாக குறிப்பிடுகிறார்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் நேற்று (19.9.2026), சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெற்ற முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “கலைஞர் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை**
19.09.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு (பாவேந்தர் விருது)**

டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு திராவிட இயக்கத் தூண்களில் ஒருவரான என்.வி. நடராசன் அவர்களின் பெயர்த்தி, மேனாள் மக்களவை உறுப்பினர், ஒன்றிய அமைச்சர் என்.வி.என். சோமு - உமாதேவி சோமு இணையரின் மகள் டாக்டர் கனிமொழி சோமு அவர்கள் 18.10.1973 அன்று பிறந்தார்.

தன்னுடைய தாத்தா என்.வி.நடராசன் அவர்களிடமும், தந்தை என்.வி.என். சோமு அவர்களிடமும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுச் சிந்தனைகள், அரசியல் சிந்தனைகளைக் கற்றுக் கொண்ட கனிமொழி அக்கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தன்னைக் கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்டு வருகிறார்.

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். கல்வியும், ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்தில் எம்.எஸ். முதுநிலைப் பட்டம் பெற்றவர்.

திரு. என்.வி.என். சோமு அவர்கள் “இலட்சியத் தந்தை” என்ற நூலை எழுதத் தொடங்கினார். இடையில் அவர் ஒன்றிய பாதுகாப்புத்துறை இணையமைச்சராகப் பொறுப்பு வகித்த நேரத்தில் விமான விபத்தில் உயிர் நீத்தார்.

தன் தந்தை விட்டுச் சென்ற பணியான அந்த நூலை நிறைவு செய்ய தான் முயன்று அந்த நூலை முழுமைப்படுத்தி 2012ஆம் ஆண்டு என்.வி. நடராசன் நூற்றாண்டு விழாவில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்.

2011ஆம் ஆண்டு மாதவரம் சட்டமன்றத் தொகுதியிலும், 2016ஆம் ஆண்டு தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியிலும் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். 2021ஆம் ஆண்டில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் மாநிலங்களவை வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றார்.

மாநிலங்களவையில் உறுப்பினராகப் பொறுப்பேற்ற பிறகு 751 விவாதங்களில் பங்கேற்றதுடன், 477 கேள்விகள் எழுப்பியதுடன் 6 தனி நபர் மசோதாக்களையும் முன்மொழிந்துள்ளார்.

கழக மருத்துவ அணியின் முதல் செயலாளராகப் பொறுப்பேற்ற டாக்டர் கனிமொழி சோமு தற்போது மருத்துவ அணித் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்திய கனிமொழி சோமு, சுகாதாரம், பெண்கள் நலம், கூட்டாட்சித் தத்துவம், கல்வி, சமூக நீதி மற்றும் தமிழ்நாட்டின் உரிமைகள் போன்ற பல்வேறு துறைகளில் தீவிரமாகக் குரல் கொடுத்துள்ளார்.

டாக்டர் கனிமொழி சோமு அவர்களுக்கு டாக்டர் சோமு சுப்பிரமணியன் என்ற மகனும், வழக்கறிஞர் வேதிகா என்ற மகளும் உள்ளனர்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் நேற்று (19.9.2026), சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெற்ற முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “பாவேந்தர் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை**
19.09.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



**திரு. மிசா எஸ். அகமது தம்பி (பேராசிரியர் விருது)**

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் திரு. சேக் அப்துல் காதர் - திருமதி. முகமது கனிமா பீவி ஆகியோரின் மகனாகப் பிறந்தவர் திரு. எஸ். அகமது தம்பி. பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இவர் பள்ளிக் காலத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தவர்.

பள்ளியில் படிக்கும் காலத்தில் அண்ணா மன்றச் செயலாளராகவும், பின்னர் மண்டபம் மாணவர் தி.மு.கழகச் செயலாளராகவும் பணியாற்றி உள்ளார்.

தொடர்ந்து 1972ஆம் ஆண்டு மண்டபம் ஒன்றியச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றிய இவர் இராமநாதபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக நான்கு முறை தேர்வு செய்யப்பட்டுப் பணியாற்றியுள்ளார்.

மூன்று முறை கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ள இவர் தற்போது வரை கழகச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார்.

இராமநாதபுரம் மாவட்ட மாநாடு நடைபெற்ற நேரத்தில் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவரை தொண்டர் படைத் தலைவராக நியமித்தார். அந்தப் பணியையும் சிறப்பாகச் செய்தவர் அகமது தம்பி.

மண்டபம் நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், அக்ரோ கூட்டுறவுத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றி நற்பெயர் பெற்றார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைவாசம் ஏகிய அகமது தம்பி மிசாவில் கைதாகி மதுரை சிறையில் ஓராண்டு காலம் இருந்துள்ளார்.

இவருக்குத் திருமணம் முடிந்து ஒரு மாதத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டத்தில் கலந்து கொண்டு திருச்சி சிறையில் 25 நாட்கள் இருந்துள்ளார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தலைமையில் 1981ஆம் ஆண்டு இவருக்கும் திருமதி. ஜமுனா ராணி அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது.

இவரது மாமனார் திரு. சேக் சுல்தான் அவர்கள் கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, மிசா உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைச் சென்றவர்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் நேற்று (19.9.2026), சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெற்ற முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “பேராசிரியர் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை**
19.09.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



**திரு. நா. இளையராஜா (மு.க.ஸ்டாலின் விருது)**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆலிவலம் கிராமத்தில் நாகராஜன் - பானுமதி இணையரின் மகனாக 2.6.1981 அன்று பிறந்தார்.

நா. இளையராஜா எட்டாம் வகுப்பு மாணவனாக இருந்த நேரத்தில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பில் இருந்த கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் நாகை மாவட்டத்தில் கிராமம் தோறும் கொடியேற்ற வருகைத் தந்தார்.

ஆர்வத்துடன் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கண்டு களித்த இளையராஜா அன்று முதல் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலினை தன்னுடைய ஆசானாக ஏற்றுக் கொண்டு களமாடத் தொடங்கினார். பின்னர் பொறியியல் பட்டப் படிப்பினை தஞ்சை சாஸ்திரா பல்கலைக் கழகத்தில் தொடர்ந்த நேரத்தில் 1999ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக தன்னுடைய கல்லூரி நண்பர்களுடன் வாக்கு சேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.

ஆலிவலம் கிராமத்தில் அந்த நாட்களில் பொதுவுடைமை இயக்கம் மட்டுமே செயல்பட்டு வந்த நிலையில் தளபதி நற்பணி மன்றத்தை உருவாக்கி அதன் முதல் கிளையின் செயலாளராகப் பொறுப்பேற்று திறம்படப் பணியாற்றினார். அந்த பத்தாண்டு காலத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 430 கிராமங்களிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அதிக எண்ணிக்கையில் இளைஞர் அணிக்கு உறுப்பினர்களைச் சேர்த்து தமிழ்நாட்டிலேயே அதிகமாக இளைஞர் அணி உறுப்பினர்களைச் சேர்த்த பெருமையும் பெற்றார். 2012 முதல் 2022 வரை திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பேற்று அவர் செய்த இப்பெரும்பணி அனைவராலும் பாராட்டப்பட்டது.

2018ஆம் ஆண்டு கஜா புயல் டெல்டா மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்படுத்திய நேரத்தில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீட்புப் பணிகளை முன்னெடுக்க வேளாங்கண்ணி வந்தபோது, சாலைகளில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து இல்லாமல் இருந்த சூழ்நிலையில் 40 கிலோ மீட்டர் தூரம் நடந்தே சென்று பார்வையிட்ட நேரத்தில், இளையராஜா அன்பகம் கலை அவர்களுடன் இணைந்து தலைவர் அவர்களோடு மீட்புப் பணியில் ஈடுபட்டார்.

2022ஆம் ஆண்டில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளராகப் பொறுப்பேற்று இளைஞர் அணி பணிகளை திறம்பட முன்னெடுத்து வருகிறார். இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்று சிறப்பாகப் பணியாற்றினார்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் நேற்று (19.9.2026), சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெற்ற முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “மு.க. ஸ்டாலின் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

**சென்னை**
19.09.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.